அலையெனத்திரண்டு சென்று சித்த சுத்தி பெறும் இனிய பீடமாகத் திகழ்கிறது.

## சபரிமலை யாத்திரை

சபரிமலை யாத்திரை ஜீவனை விழிப்படையச் செய்யும் புனிதப் பயணமாகும். இப்புனித பயணம் பல வகைகளில் சிறப்புடையது. குருசாமியின் தலைமையில் யாத்திரை தொடங்கும். இருமுடி தூக்கிச், சரணம் விளித்து, வழிநடை மேற்கொள்வர்.

இருமுடி சுமந்திடும் ஐயப்ப பக்தர்கள் அச்சன்கோயில், ஆரியங்காவு, குளத்துப்புழை, பந்தளம் எனும் திருத்தலங்களுக்குச் சென்று அங்குள்ள தர்ம சாஸ்தாவை வழிபட்டு எருமேலி செல்வர். அங்கிருந்து 40 மைல் நடந்து பெருவழிப் பாதையினை மேற்கொள்வர். பிறபாதைகளும் உள்ளன. முன்னாளைய யாத்திரைகளின் கடினம் இன்று வெகுவாகக் குறைந்துள்ளது.

யாத்திரை கருதிய நோன்பு தனிச் சிறப்புகள் உடையது. அதிகாலையில் நீராடல், வெறும் வயிற்றில் நாம ஸ்மரணை, சீருடை, செருப்பின்மை, தரையில் உறக்கம், புலால் மறுப்பு, பிரம்மச்சரியம் - என அகமும் புறமும் தூய்மை பேணப்படுகிறது. யாத்திரையிலோ காட்டு வழிப்பாதை, கூட்டு வழிபாடு, வழியுறை தெய்வ வழிபாடுகள், பேட்டை துள்ளல், பம்பா சத்யா, பம்பை விளக்கு, பதினெட்டாம் படி, நெய்யபிஷேகம், மகர விளக்கு, மகர ஜோதி எனப் பல்வகை இனிமைகள்.

இப்புனித யாத்திரை அகவயப்படுத்தும் பார்வையில் ஓர் ஆன்ம யாத்திரையே ஆகும். பேரானந்தம் நோக்கிய ஆன்மப் பயணம் இது. காலமும், இடமும், வேடமும் கரைந்த இறைக் காதலின் நகர்வே இப்பயணம். இப்பயணம் விரதமுடையது;


தரிசனம் காத்து...

குருவின் வழிகாட்டல் உடையது; சத்சங்கத்துணையுடையது; நாமஸ்மரணையின் பலமுடையது; வழி நடைவருத்தம் போக்கும் வாசகங்களின் முழக்கமுடையது; தங்கி இளைப்பாறும் தாவளங்களுடையது; நீராடித் தூய்மை பெற நீரோடைகள் பல உடையது; அகந்தையைக் கரைக்கும் ஏற்ற இறக்கங்கள் உடையது; அச்சுறுத்தும் வழிகளிலே அருள் நல்கும் தேவதைகள் உடையது; உயர் ஞானப் படியேற்றம் பதினெட்டும் உடையது எனும் நிலையில் அகமும் புறமும் கலந்த தொரு ஆன்ம லாபம் இங்கு கனிகிறது.

## சயனப்பிரதட்சணம்

வழிபடு முறைகளில் ஒன்று. ஐயப்ப பக்தர்களில் நேர்ச்சை செய்து கொண்டோரும், ஆர்வமுடையோரும் காலையில் பஸ்ம குளத்தில் நீராடி, பக்தியோடு ஸ்ரீ கோயிலை அங்கப் பிரதட்சணம் செய்வர். இவ்வாறு உருண்டு கொடுக்கும் வழிபாடு முடிந்தபின் மீண்டும் நீராடி வந்து தரிசனம் பெறுவர்.

## சர்வ பிராயச் சித்தம்

இருமுடிக் கட்டினை எடுக்கும் போது ஐயப்பன்மார் சர்வப் பிராயச் சித்தப் பிரார்த்தனை கூறுவர். ''தர்ம சாஸ்தாவே எங்கள் பிழைகளைக் காத்து ரக்ஷிக்க வேண்டும்...'' என பய பக்தியுடன் வேண்டுவர். அறியாது நேரிட்ட அபராதங்கள் இருப்பின் அவற்றை மன்னிக்குமாறு வேண்டும் விநயம் இது. ஆசாரங்களில் எவ்வகைப் பிழைகளும் நேர்ந்து விடக் கூடாது என்பதில் மேற்கொள்ளப்படும் பக்தி சிரத்தை இது.

## சரங்குத்திஆல்

சபரிபீடத்தை அடுத்து வருவது சரங்குத்தி ஆல், எருமேலியில் பெற்று வந்த சரங்களை (சிவப்பு, பச்சை போன்ற நிறமுடைய தாள்களைச் சுற்றி இறகு ஒட்ட வைத்த குச்சி) கன்னி ஐயப்பன்மார் இவ்விடத்தில் இடும் சடங்கு ஒன்று உள்ளது. இரண்டாம் மலை வருவோர் மரக்கத்தியும் கொண்டு வருவர். அம்புகள் இலட்சக்கணக்கில் குத்தப்பட்டிருக்கும். ஐயப்பனும் அவன் படையினரும் தம் ஆயுதங்களை விட்ட இடம் என்பர். இங்கு சரண ஒலி மிகுதி.

## சரணாகதி

ஐயப்ப வழிபாட்டின் அடிநாதம் சரணா கதி. அனைத்து ஆன்மீக முயற்சிகளும் சரணாகதியில் சுழல்வனவே; சரணாகதிக்காகச் சுழல்வனவே. ஐயப்ப வழிபாடு சரணாகதித் தத்துவத்தை நடைமுறைத் தத்துவமாக்கியுள்ளது. சரண கோஷமே சரணாகதித் தத்துவத்தின் நடைமுறைச் செயல்பாடு. கோடி கோடியாகக் கொட்டப்படும், ''சரணம் ஐயப்பா....'' எனும் இச்சரண கோஷம் பரம் பொருளுக்கு வேறு எந்தப் பெயரிலும் இத்துணை அளவு கிட்ட வில்லை. விரதம் மேற்கொண்ட ஐயப்பன்மார் வருணாசிரம பேதமின்றி, நாள்தோறும் நாவார ஒலிக்கும் சரண கோஷத்தால் ஒரு புனித மண்டலமே உருவாகின்றது. விரதம் தொடங்கிய நாள் முதலாக ஐயப்பன்மார் தனித்தனியே இடையறாது சரணம் விளித்தும், தத்தம் இல்லங்களிலும், ஆங்காங்கே ஆலயங்களிலும் சிறு சிறு குழுக்களாகக் கூடி நின்று நாள்தோறும் சரணஒலி முழக்கியும், வனயாத்திரைப் பாதைகளிலும், தாவளங்களிலும் சரண கோஷம் பெருக்கியும் பல்திசைகளினின்று புறப்பட்டு வந்த அனைத்துச் சரண ஒலிகளும் சபரிமலை சந்நிதானம் நோக்கி நகர்ந்து, நகர்ந்து இறுதியில் பெருங்கடலின் அலை முழக்கமாக-சரணகோஷத்தின் மையமாக விளங்கும் சபரிகிரீசனின் திருவுருவ சோபையில் ஒடுங்குகின்றன. சரண கோஷத் தன்மாத்திரைகளின் சரணாபிஷேகம் அங்கு நிகழ்கிறது. இச் சரணாகதி அபிஷேகத்தின் புறக் காட்சியே நெய்யபிஷேகம்.

## சாலக்கயம் பாதை

சபரிமலைக்கு அமைந்த மூன்று வழிகளில் மிகவும் எளிய வழி இது. அண்மையில் பிரபலம் அடைந்த வழி. பம்பை

**ஏகாந்தவாசியே... சரணம் ஐயப்பா ❁ ஏழைபங்காளனே... சரணம் ஐயப்பா**